**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 129/மா/2021**

**நாள் : 22.3.2022**

திரு. தி. பெருமாள்,
தூத்துக்குடி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

தூத்துக்குடி, சிலுவைப்பட்டி போஸ்ட், மேல அலங்காரத்தட்டு, 1/237-A என்ற எண்ணிடப்பட்ட முகவரியில் வசிக்கும் திரு. தி. பெருமாள் அவர்களின் 16.11.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.11.2021-ல் பெறப்பட்டு, 129/மா/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தூத்துக்குடி, சிலுவைப்பட்டி போஸ்ட், மேல அலுங்காரத்தட்டு, 1/237-A என்ற எண்ணிடப்பட்ட முகவரியில் வசிக்கும் திரு. தி. பெருமாள் என்பவர் தன்னுடைய 16.11.2021 நாளிட்ட மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :

- "திரு. E. ஜெயசந்திரன் என்பவர் தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலத்தில் வழங்கியது போன்று போலி ஆவணம் தயார் செய்து சொத்து வரி விதிப்பு எண்.138/0/17-18/0008923/ நாள்: 10.06.2017 Ward எண்.17 போலி ஆவணத்தின் மூலம் தூத்துக்குடி உதவி மின் செயற் பொறியாளர்/ விநியோகம்/வடக்கு/ தூத்துக்குடி மின்சார வாரியத்தில் போலி சொத்து

விதிப்பு ரசீதை கொடுத்து கடந்த 01.11.2017 அன்று மின் இணைப்பு பெற்றுள்ளார்.

- மின் இணைப்பு எண்.347-025-723/நாள்:01.11.2017.
- தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலத்தில் வழங்கியது போன்று தயார் செய்ய மாநகராட்சியின் பணியாளர்களின் தொடர்பு இல்லாமல் இந்த ரசீது பெற்று இருக்கமுடியாது. ஆகையால் கடந்த 2017-ஆம் ஆண்டு பணிபுரிந்த அந்த பிரிவில் யார், யார் எல்லாம் பணிபுரிந்தார்கள். இதில் யாருக்கு தொடர்பு உள்ளது என்று விசாரணை செய்தால் உண்மை தெரிந்துவிடும்.
- போலி ரசீது தயார் செய்ய உடந்தையாக இருந்தவர்கள் மீது துறை ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளவும், லஞ்சம் பெற்று கொண்டு போலி ஆவணம் தயார் செய்வதற்கு துணைபோன பணியாளர்கள் அல்லது அதில் தொடர்பு உள்ளவர்களை கண்டு அறிந்து போலி ஆவண தயார் செய்த குற்றத்திற்காக அரசு விதியில் என்ன தண்டனை உள்ளதோ அதை பெற்றுத் தர சமூகம் கருணை கூர்ந்து நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் பணிவாய் கேட்டுக்கொள்கிறேன்.
- மேற்படி போலி ஆவண ரசீது கொடுத்து மின் வாரியத்தில் மின் இணைப்பு பெற்றதை ரத்து செய்ய சம்பந்தப்பட்ட தலைமை மின்சார அதிகாரி அவர்களுக்கு பரிந்துரைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் முறையீட்டு மனுவின் மீதான அறிக்கையை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைக்குமாறு 20.12.2021 நாளிட்ட கடிதம் மூலமாக தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் பிரதிநிதி ஆகியோர் 22.2.2022 நாளிட்ட அழைப்பாணையின் மூலம் 1.3.2022 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு கோரப்பட்டனர்.

மனுதாரர் 1.3.2022 அன்று திருநெல்வேலி முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"தூத்துக்குடி வடக்கு மண்டலத்தில் சொத்து வரி வழங்கியது போன்று ஆவணங்களை தயார் செய்து மின் இணைப்பு பெற்றுள்ளார். மேற்கண்ட போலி சொத்து வரி ஆவணம் தொடர்பாக தூத்துக்குடி மாநகராட்சியில் புகார் மனுக்களை அனுப்பியும் எனது மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, எனவே, இந்நேர்வில் மாநகராட்சி அலுவலர்களால் உரிய விசாரணை மேற்கொண்டு போலியான சொத்து வரி ரசீதை ரத்து

செய்யுமாறும், போலி சொத்து வரி தயார் செய்ய உடந்தையாக இருந்த அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மாநகராட்சி அப்ரூவல் (பிளான்) இல்லாமல் கட்டப்பட்டுள்ள வீடு தொடர்பாக விசாரணை மேற்கொள்ளவும், அதன்படி நடவடிக்கை எடுக்கவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.'' என்று தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சி உதவி ஆணையர் மற்றும் நிர்வாக அலுவலர் (பொ) திரு. டி. தனசிங் 1.3.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“மனுதாரர் திரு. பெருமாள் தெரிவித்துள்ள போலி சொத்து வரி தொடர்பாக மாநகராட்சிப் பதிவுகளை ஆராய்ந்ததில், அவர் அளித்துள்ள சொத்து வரியின் நகல் போலியானது என்றும், மனுதாரர் கூறியுள்ள விவரத்தை மாநகராட்சி ஆவணங்களை சரிபார்த்ததில் வரி விதிப்பு எண் 138/017/01824 கேட்பு பதிவேட்டில் மீனாட்சி க/பெ கணபதி செட்டியார் கதவு எண் 2–482–2 தெரு பெயர் ஐயர் விளை என குறிப்பிடப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டல உதவி ஆணையர் தனது 1.3.2022 நாளிட்ட அறிக்கையில் பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்.

- மனுதாரரின் புகாரில் போலி ஆவணம் தயார் செய்து, மின் இணைப்பு பெறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மனுதாரரின் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி தூத்துக்குடி மாநகராட்சியிலிருந்து எந்தவிதமான போலி ஆவண ரசீது வழங்கப்படவில்லை.
- மேலும் மனுதாரரின் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் தொடர்பாக மாநகராட்சியில் இருப்பில் உள்ள ஆவணங்களை சரிபார்க்கப்பட்டதில் வரிவிதிப்பு எண்.138/017/01824/கேட்பு பதிவேட்டில் மீனாட்சி க/பெ. கணபதி செட்டியார் கதவு எண்.2-482-2 தெரு பெயர் ஐயர்விளை என்று உள்ளது என்ற விபரத்தினை பதிலுரையாக பதிந்து தாக்கல் செய்யப்படுகிறது.
- மேற்கண்ட வாதத்தின் அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு நடுவர் அவர்கள் மனுதாரர் தாக்கல் செய்த இந்த மனுவினை நிராகரித்து தக்க நீதி வழங்க பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், தூத்துக்குடி மாநகராட்சி உதவி ஆணையர் மற்றும் நிர்வாக அலுவலர் (பொ) அவர்களின் அறிக்கை, வாக்குமூலம்,

இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

திரு. E. ஜெயசந்திரன் அவர்களின் தந்தை மு. இருளாண்டி பெயரில் உள்ள சொத்து தொடர்பான வில்லங்கச் சான்று ஆவண எண் மற்றும் ஆண்டு 3213/1979 நாள்: 30.7.2021 நடப்பு ஆண்டு 2021 வரை உள்ளது.

தூத்துக்குடி மாநகராட்சி 17வது வார்டு மேல அலங்காரத்தட்டு திரு. மு. இருளாண்டி அவர்களின் இளைய மகன் திரு. ஜெயசந்திரன் என்ற பெயரில் சொத்து வரி விதிப்பு தொடர்பாக எவ்வித விண்ணப்பமும் பெறப்படவில்லை என 7.10.2021 நாளிட்ட மாநகராட்சி பதிலறிக்கை மூலம் அறிய முடிகிறது.

செயற்பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தூத்துக்குடி அவர்களின் அறிக்கையில் இருந்து நுகர்வோர் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த உரிமை ஆவணமான வீட்டு வரி தீர்வை ரசீதின் அடிப்படையில் TNERC விதிகளின்படி மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

மனுதாரர் திரு. பெருமாள் அளித்துள்ள சொத்து வரியின் நகலினை வைத்து ஆவணங்களை மாநகராட்சி அதிகாரிகள் சரிபார்த்ததில் அந்த வரி விதிப்பு எண்.138/017/01824 கேட்பு பதிவேட்டில் மீனாட்சி க/பெ. கணபதி செட்டியார் கதவு எண்.2-482-2 தெரு பெயர் ஐயர் விளை என குறிப்பிடப்பட்டுள்ளதாக தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டல உதவி ஆணையர் மற்றும் நிர்வாக அலுவலர் (பொறுப்பு) அவர்களின் வாக்குமூலம் மற்றும் அறிக்கையிலிருந்து அறியமுடிகிறது.

மனுதாரர் திரு.பெருமாள் சுட்டிக்காட்டியுள்ள வரிவிதிப்பு எண்.138/01/17–18/0008923/ நாள். 10.06.2017 ward எண்.17 போலி ஆவணம் என்றும் உதவி ஆணையர் மற்றும் நிர்வாக அலுவலர் வாக்குமூலத்தின் மூலம் அறிய முடிகிறது. அது உண்மையானால் திரு. E. ஜெயசந்திரன் வீட்டிற்கு மாநகராட்சியால் இதுவரை சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளதா அல்லது இல்லையா என எந்த தகவலும் சமர்ப்பிக்கப்படவில்லை. இது தொடர்பாக மாநகராட்சியால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற விவரமும் அளிக்கப்படவில்லை. இதுபோன்று எவ்வளவு குடியிருப்புகள் மற்றும் வணிக வளாக கட்டிடங்கள் சொத்து வரி விதிக்கப்படாமல் உள்ளன என கண்டறியப்பட வேண்டும். மாநகராட்சியின் வருவாயினை பெருக்கிட விருப்பு வெறுப்பு இன்றி எந்த விடுபாடுகளும் இன்றி சொத்து வரி நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதி செய்துகொள்ள மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இந்நேர்வில் திரு. E. ஜெயசந்திரன் என்பவர் தூத்துக்குடி வடக்கு மண்டலத்தில் சொத்துவரி வழங்கியது போன்று ஆவணங்களை தயார் செய்து மின் இணைப்பை பெற்றுள்ளார்.

இதனை ரத்து செய்து இதற்கு உடந்தையாக இருந்த அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க மனுதாரர் கோரியுள்ளார்.

மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் தூத்துக்குடி மாநகராட்சி உதவி ஆணையர் மற்றும் நிர்வாக அலுவலர் (பொ) அறிக்கை வாக்குமூலத்திலிருந்து திரு. E. ஜெயசந்திரன் என்பவர் போலி ஆவணம் வழங்கியுள்ளதாக தெரியவருகிறது. அதன் உண்மைத் தன்மையை அறியும் பொருட்டு திரு. E. ஜெயசந்திரன் அவர்களிடம் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் அது சமயம் அவரிடம் உள்ள ஆதார ஆவணங்களை ஆராய்ந்து அந்த விசாரணையில் போலி ரசீது சமர்ப்பித்துள்ளது ஊர்ஜிதமானால் அவர் மீது காவல் துறை மூலம் உரிய நடவடிக்கை எடுக்க தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள மாநகராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் தொடர்பாக ஒரு குழு அமைத்து கள ஆய்வு மேற்கொண்டு விதிமுறைகள் மீறி கட்டப்பட்ட கட்டுமானங்கள் மீது விதிமுறைகளை பின்பற்றி உரிய நடவடிக்கை எடுக்கவும் , மாநகராட்சியின் வருவாயினை பெருக்கிட, சொத்துவரி விதிக்கப்படாத கட்டிடங்களை கண்டறிந்து சொத்து வரி விதிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

The Commissioner, Thoothukudi Corporation is directed to file a Police Complaint about the alleged bogus Property Tax Notice involved in this petition.

2) The person in whose name the notice has been issued should be summoned for necessary enquiry by the Corporation officials of the area and statement obtained to proceed further in accordance with Law.

3) The EB authorities of the area to be informed about this fraud and requested to cut off the EB connection already issued on the basis of the alleged bogus Property Tax Notice of the Corporation of Thoothukudi.

4) It should be verified whether the house in question has been constructed with a proper planning permission or otherwise. If it has been raised without planning clearance, appropriate action as per Town and Country Planning Act and the Local Body rules of the Thoothukudi Corporation should be initiated at the earliest. The local Corporation officials who had failed to take cognizance of the violation should be identified and charge sheeted in accordance with the procedure of disciplinary action.

5) The DMA may set a time frame for completion of these tasks by the Commissioner, Thoothukudi Corporation within at least 3 months.

2022-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. தி. பெருமாள்,
   1/237-A,
   மேல அலுங்காரத்தட்டு,
   சிலுவைப்பட்டி போஸ்ட்,
   தூத்துக்குடி- 628 002.
2. ஆணையர்,
   தூத்துக்குடி மாநகராட்சி.
   தூத்துக்குடி.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
4. இணை இயக்குநர்,
   ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

22/3/22

செயலாளர்